செ.வெ.எண்: 2 நாள்: 01.09.2016

**பத்திரிகைச்செய்தி**

வீடற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனை வழங்குவதற்காக, ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் நிலஎடுப்பு செய்யும் திட்டத்தினை அரசு ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு கவனத்துடன் செயல்படுத்தி வருகிறது. நடப்பு 2016-17 ஆம் நிதியாண்டில் வீடற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் இத்திட்டத்தின் பயனை முழுமையாக பெறுவதற்காக முதற்கட்டமாக அம்மக்களின் நிலத்தேவையை உறுதி செய்து பயனாளிகளின்பெயர்ப்பட்டியல் தயார் செய்து அதனடிப்படையில் தேவைப்படும் நிலத்தின் பரப்பளவினைக் கணக்கிட வேண்டியுள்ளது. எனவே ஆண்டு வருமானம் ரூ.40000 /-க்கும் குறைவாக உள்ள வீடற்ற ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் இலவச வீட்டுமனை கோரி புதுக்கோட்டைமாவட்டஆட்சித்தலைவர்/ புதுக்கோட்டை மாவட்டஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்/ புதுக்கோட்டை / அறந்தாங்கி (ஆதிந) தனிவட்டாட்சியர்களை அணுகி மனுக்களை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இத்திட்டத்திற்கென நிலஎடுப்பு செய்வதற்காக அரசு நிர்ணயிக்கும் விலைக்கு நிலத்தை விற்பனை செய்ய முன்வரும் பெருந்தன்மையுடைய நில உரிமையாளர்களும் மேற்குறிப்பிட்ட அலுவலர்களை அணுகலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**